EMPLOYMENT ONTARIO
Ontario's employment & training network

Ontario

**வேலைத் தொடர்பு**

இந்த ஒன்டாரியோ அரசாங்கத்திட்டம், தங்கள் வியாபார தேவைகளை பூர்த்தி செய்ய புதிய ஊழியர்களை தேடும் வேலை வழங்குபவர்களுக்கும் வேலை தேடும் நபர்களுக்கும் நடுவே உள்ள இடைவெளியை நிரப்புவதன்மூலம், மக்கள் தொடர்ச்சியாக வைத்திருக்ககூடிய வேலைகளை பெற்றுகொள்ள உதவுகிறது.

இது தனிநபர்களின் வேலை மற்றும் பயிற்சித்தேவை அத்தோடு வேலை வழங்குபவர்களின் தேர்ச்சிபெற்ற வேலையாட்களுக்கான தேவை என்பவற்றை பூர்த்திசெய்ய பல்வேறுபட்ட சேவைகளை வழங்குகிறது. இது உயர்ந்தரக தேர்ச்சிப் பயிற்சி (skills training) மற்றும் வேலை ஆகியவற்றுக்கான பாதையில் மக்களை இட்டுச்செல்லும். சேவைகள் ஒன்டாரியோ முழுவதிலும் கிடைக்கபெறுகின்றன.

ஒன்டாரியோவில் வர்த்தகம் ஒன்றை இயக்குபவர்களும் புதிய உத்தியோகஸ்தர்களை தேடுபவர்களும் வேலைத்தொடர்பில் (Job Connect) இருந்து பயனடையலாம்.

**என்ன சேவைகள் கிடைக்கப்பெறுகின்றன?**

இந்தத் திட்டத்தில் மூன்று சேவைப் பகுதிகள் உள்ளன. இவை தனி நபர்களின் தேவைகளப் பூர்த்திசெய்ய வடிவமைக்கப் பட்டவை:

- தொழில்கள், உத்தியோகங்கள், உள்ளூர்த் தொழிலாளர் சந்தை, பயிற்சி வாய்ப்புக்கள் மற்றும் வேலை தேடும் உபாயங்கள் ஆகியவற்றிற்கான தகவல் மற்றும் வளங்கள், உபதேச வகுப்புக்கள் (வேக்ஷொப்) ஆகியவற்றை, தகவல் மற்றும் வளங்களுக்கான சேவை (Information and Resource Service) வழங்குகிறது. சர்வதேச ரீதியில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் தங்கள் தேர்ச்சிக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற வேலையைத் தேடிட வளமும் மற்றும் அப்ரெண்டிஷிப் பயிற்சிக்கான தகவலும் இங்கே உண்டு.
- தனி நபர்கள் தங்கள் வேலைத் தேவைகளைத் தெளிவுபடுத்தவும், ஒரு நடைமுறைத் திட்டத்தைத் தீட்டவும், வேலை தேடுவதிலும் முடிவுகள் எடுப்பதிலும் உதவி செய்ய, உத்தியோகத் திட்டமிடலும் தயார்ப்படுத்துதலும் (Employment Planning and Preparation) என்ற சேவை ஆதரவு வழங்கும்.
- வேலை அனுபவம் மற்றும் வேலையில் பயிற்சி போன்றவற்றைப்பெற, உத்தியோக அபிவிருத்தியும் உத்தியோகத்தில் அமர்த்த ஆதரவும் (Job Development and Placement Support) என்ற சேவை உதவும்.

**வேலைத் தொடர்பிலிருந்து வேலை வழங்குபவர்கள் எவ்வாறு பயனடையலாம்?**

தகவல் மற்றும் வளங்களுக்கான சேவையின் மூலமாக வேலை வழங்குபவர்கள் தங்களிடம் இருக்கும் வேலைகளை விளம்பரம் செய்யலாம். வேலைத் தொடர்பு ஊழியர்கள் வேலை வழங்குபவர்களின் வியாபாரத் தேவைகளை பூர்த்தி செய்ய, தெரிவுசெய்தல் மற்றும் வேலையில் சேர்த்தல் ஆகிய சேவைகளை வழங்கலாம். உத்தியோக அபிவிருத்தியும் உத்தியோகத்தில் அமர்த்த ஆதரவும் என்ற சேவையின் மூலம் வேலைத்தொடர்பில் பங்கெடுப்பவருக்கு வேலையில் பயிற்சி/ வேலை அனுபவம் போன்றவற்றை வழங்க ஏற்படும் செலவை ஈடுசெய்ய, வேலை வழங்குபவர்கள், பயிற்சி ஊக்கமூட்டுதலை (ட்ரெய்னிங் இன்சென்டிவ்) பெறத் தகுதியடையலாம்.

**யார் பங்குகொள்ள முடியும்?**

- **தகவல் மற்றும் வளங்களுக்கான சேவை:** இந்த சமூக வளத்திற்கு வேலை அல்லது வேலைப் பயிற்சி தேடும் எவரும் நியமனம் இல்லாமல் செல்லலாம்.
- **உத்தியோகத் திட்டமிடலும் தயார்ப்படுத்துதலும்** அத்தோடு **உத்தியோக அபிவிருத்தியும் உத்தியோகத்தில் அமர்த்த ஆதரவும்:** ஆகக்குறைந்தது 16 வயதுடையவர்களும், வேலையிலும் பாடசாலையிலும் இல்லாதவர்களும் மற்றும் எம்ப்ளோய்மன்ட் இன்சுரன்ஸ் உதவி பெற்றுக்கொண்டிராதவர்களும்.

**இந்த சேவைகளை நான் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?**

1-800-387-5656
(416) 326-5656 (Toronto)

www.ontario.ca/employmentontario

ISBN 1-4249-2457-X